முருக பக்தர்கள் மாநாடு அல்ல; அரசியல் மாநாடு

சென்னை, ஜூன் 22: இந்து முன்னணி, பாஜக சார்பில் மதுரையில் நடத்தப்பட்ட முருக பக்தர்கள் மாநாடு, முழுக்க முழுக்க அரசியல் மாநாடு என்றும், அதற்கு இறைவன் துணையாக இருக்கமாட்டார் என்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

சென்னை அயனாவரம் காசி விஸ்வநாதர் திருக்கோயிலில், பொதுநல நிதி மற்றும் திருக்கோயில் நிதி ரூ.97 லட்சத்தில் திருக்குளம் சீரமைக்கும் பணிகளை ஞாயிற்றுக்கிழமை தொடங்கிவைத்த அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறியதாவது:

தமிழகத்தில் கோயில்கள் சார்பில் ரூ.350 கோடியில் 87 புதிய திருமண மண்டபங்கள், ரூ.131 கோடியில் 147 புதிய அன்னதானக் கூடங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், கடந்த 4 ஆண்டுகளில் 3,118 கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. நிகழாண்டு இறுதிக்குள் 3,500 கோயில்களில் குடமுழுக்கு நடத்தப்படும். கோயில்களுக்குச் சொந்தமான 7,598.13 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

தமிழ்க் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கக் கூடிய ஆட்சியாக திமுக ஆட்சி திகழ்கிறது. முருக பக்தர்களுக்கும், முருகன் திருத்தலங்களுக்குமான திட்டங்களைச் செயல்படுத்தி முருகனுக்கு பெருமை சேர்த்துள்ளோம்.

மதுரையில் இந்து முன்னணி, பாஜக சார்பில் நடத்தப்படும் முருக பக்தர்கள் மாநாடு முழுக்க முழுக்க அரசியல் மாநாடு. அதேவேளையில், திமுக அரசு முன்னெடுக்கும் பணிகள் அறம் சார்ந்தவை, பக்தர்கள் நலன் சார்ந்தவை, ஆன்மிகம் சார்ந்தவை. போலியான செயல்பாடுகளுக்கு இறைவன் எப்போதும் துணை இருக்க மாட்டார் என்றார் அமைச்சர் பி.கே.சேகர்பாபு.

பேட்டியின்போது, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சென்னை மண்டல இணை ஆணையர் ஜ.முல்லை உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தருமபுரியில் பேருந்து மோதியதில் இரு துண்டுகளான டிராக்டர்; 10 பேர் காயம்

தருமபுரி, ஜூன் 22: தருமபுரியில் ஞாயிற்றுக்கிழமை மாலை பேருந்து -டிராக்டர் மோதிக் கொண்ட விபத்தில் டிராக்டர் இரு துண்டுகளாக உடைந்தது. இந்த சம்பவத்தில் 10 பேர் காயமடைந்தனர்.

தருமபுரி பேருந்து நிலையத்திலிருந்து சேலம் நோக்கி அரசுப் பேருந்து ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தது. இதில் 60க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். பேருந்து ஓட்டுநராக நாராயணன் (58), நடத்துநராக மாதேசன் (52) பணியிலிருந்தனர். தருமபுரி -சேலம் பிரதான சாலையில் பச்சியம்மன் கோயில் அருகே (தனியார் மருத்துவமனை பேருந்து நிறுத்தம் முன்) பேருந்து சென்றபோது, கால்நடை தீவனத்துக்குப் பயன்படும் வைக்கோலை ஏற்றிவந்த டிராக்டர் சாலையைக் கடக்க முயன்றது. டிராக்டரை கார்த்திகேயன் ஓட்டிச்சென்றார். அப்போது எதிர்பாராதவிதமாக பேருந்தும், டிராக்டரும் மோதிக்கொண்டன.

விபத்தில் சேதமடைந்த அரசுப் பேருந்து. அருகில் இரு துண்டுகளாக உடைந்த டிராக்டரின் என்ஜின் பகுதி.

இந்த விபத்தில் டிராக்டரின் என்ஜின் பகுதி, முன்சக்கரங்களும், பின்சக்கரங்களுக்கும் இடைப்பட்ட பகுதி முறிந்து இரு துண்டுகளானது. அதேபோல பேருந்தின் முன்பகுதி முற்றிலும் சேதமடைந்தது. இந்த விபத்தில் பேருந்து பயணிகள் 7 பேர், ஓட்டுநர் நாராயணன், நடத்துநர் மாதேசன், டிராக்டர் ஓட்டுநர் கார்த்திகேயன் உள்ளிட்ட 10 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்த தருமபுரி நகர காவல் நிலைய போலீஸார் மற்றும் போக்குவரத்து பிரிவு போலீஸார் நிகழ்விடத்துக்கு விரைந்து சென்று, காயமடைந்தவர்களை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இந்த விபத்தால் அப்பகுதியில் ஒரு மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. விபத்தில் சிக்கிய பேருந்து, டிராக்டரை கிரேன் மூலம் போலீஸார் அப்புறப்படுத்தினர். அதன்பிறகு போக்குவரத்து சீரானது.

சம்பவம் குறித்து தருமபுரி நகர போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருநங்கை ஜென்சிக்கு முதல்வர் வாழ்த்து

சென்னை, ஜூன் 22: ஆங்கிலத் துறையில் முனைவர் பட்டம் பெற்று லயோலா கல்லூரியில் உதவிப் பேராசிரியராக நியமனம் பெற்றுள்ள திருநங்கை ஜென்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்ட பதிவு:

வாழ்த்துகள் முனைவர் ஜென்சி. உங்களது உழைப்பின் ஒளியால் இன்னும் பல நூறு பேர் கல்விக்கரை சேரட்டும். தடைகளையும் புறக்கணிப்புகளையும் கல்வி எனும் பேராற்றல் வெல்லட்டும் என்று அவர் பதிவிட்டுள்ளார்.

விஜய் பிறந்த நாள்: தமிழகம் முழுவதும் தவெக–வினர் நல உதவிகள் அளிப்பு

சென்னை, ஜூன் 22: தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜயின் பிறந்தநாளையொட்டி, தமிழகம் முழுவதும் அக்கட்சியினர் ஞாயிற்றுக்கிழமை பொது மக்களுக்கு பல்வேறு நல உதவிகளை வழங்கினர்.

தவெக தலைவர் விஜயின் 51–ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அக்கட்சி சார்பில் ஞாயிற்றுக்கிழமை பல்வேறு நல உதவிகள் வழங்கப்பட்டன. சென்னையில் ஈஞ்சம்பாக்கம், அடையாறு, சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகளுக்கு மோதிரம், குழந்தைகளுக்கான பெட்டகம், புத்தாடைகள் உள்ளிட்டவற்றை அக்கட்சியின் பொதுச்செயலர் என்.ஆனந்த் வழங்கினர்.

இந்நிகழ்வில், தவெக தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச் செயலர் ஆதவ் அர்ஜுனா, சென்னை புறநகர் மாவட்டக் கழகச் செயலர் சரவணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

திமுகவுக்கு பயம்: புஸ்ஸி ஆனந்த் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பல்வேறு இடங்களில் நலத் திட்ட உதவிகளை வழங்க கூடாது என போலீஸார் கட்சி நிர்வாகிகளுக்கு இடையூறு அளித்து வருகின்றனர்.

கோயில்களுக்கு வெளியே அன்னதானம் வழங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. உளுந்தூர்பேட்டை அருகே காட்டுசெல்லூர் பகுதியில் விளம்பரத் தட்டி வைத்த தவெக நிர்வாகிகள் மீது திமுகவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். தவெகவின் வளர்ச்சியைப் பார்த்து பயப்படும் திமுக இது போன்ற செயல்களில் ஈடுபடுவது கண்டனத்துக்குரியது என்றார் அவர்.

அரசியல்தலைவர்கள்வாழ்த்து: விஜய் பிறந்தநாளையொட்டி, அவருக்கு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, தமிழ்நாடு பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், அக்கட்சியின் மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

ஆலங்குடி அருகே சாலை விபத்து: அமைச்சர் உள்பட 5 பேர் காயம்

ஆலங்குடி, ஜூன் 22: புதுக்கோட்டைமாவட்டம், ஆலங்குடி அருகே ஞாயிற்றுக்கிழமை நடந்த சாலை விபத்தில் புதுச்சேரி வேளாண் துறை அமைச்சர் உள்பட 5 பேர் காயமடைந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காதணி விழாவில் பங்கேற்க புதுச்சேரி வேளாண் துறை அமைச்சரான ஜெயக்குமார் காரில் புதுக்கோட்டை, ஆலங்குடி வழியாகச் சென்றார். காரை சிலம்பரசன் ஓட்ட, அமைச்சரின் உதவியாளர் பிரகாசம், பாதுகாவலர் தயாநிதி, அமைச்சரின் நண்பரான அறந்தாங்கி சுகுமாரன் ஆகியோர் உடனிருந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே ஞாயிற்றுக்கிழமை விபத்துக்குள்ளான அமைச்சரின் கார்.

ஆலங்குடி அருகேயுள்ள மாங்காடு பூச்சிக்கடை அருகே அவர்கள் சென்றபோது ஒரு பைக் சாலையில் திடீரென திரும்பியது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையோரத்தில் கிடந்த பெரிய கல்மீது மோதியது. இதில் காரில் இருந்த 5 பேரும் காயமடைந்து, புதுக்கோட்டை தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்து குறித்து வடகாடு போலீஸார் விசாரிக்கின்றனர்.

மாணவர் மீது தாக்குதல் நடத்திய ஆசிரியர்: ஆர்டிஓ விசாரணைக்கு உத்தரவு

தருமபுரி, ஜூன் 22: தருமபுரி அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வரும் மாணவரை ஆசிரியர் தாக்கிய விவகாரம் தொடர்பாக கோட்டாட்சியர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரகம் தெரிவித்துள்ளதாவது:

தருமபுரி மாவட்டம், இலக்கியம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியர் ஒருவர், பள்ளியில் பயிலும் மாணவரிடம் அவரது தாயாரின் கைப்பேசி எண்ணை பெற்று வருமாறு பலமுறை வற்புறுத்தினாராம். வாங்கிவராததால் மாணவரை மிரட்டி அடித்ததாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து வார இதழ்களில் செய்தி வெளியானது.

இதையடுத்து ஜூன் 20 ஆம் தேதி சமூக வலைதளங்களில் காணொலி வெளியானது. இது தொடர்பாக புகார் ஏதும் வரப்பெறாததால், சம்பந்தப்பட்ட மாணவரின் தாயாரிடமிருந்தோ அல்லது மாணவரிடமிருந்தோ புகார் பெற ஏதுவாக மாணவர் மனசுப்பெட்டி (பள்ளி பாதுகாப்பு மற்றும் ஆலோசனைக் குழு) மூலம் நடவடிக்கை எடுக்க இலக்கியம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியருக்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஜோதிசந்திரா அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தருமபுரி வருவாய் கோட்டாட்சியருக்கு ஆட்சியர் ரெ. சதீஷ் உத்தரவிட்டுள்ளார். இந்நிலையில் இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணை முடிவில் தொடர்புடைய ஆசிரியர் மீது குற்றம் உறுதியானால் அவர்மீது உரிய நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடையம் அருகே பிரியாணி சாப்பிட்ட 9 பேருக்கு ஒவ்வாமை

அம்பாசமுத்திரம், ஜூன் 22: தென்காசி மாவட்டம் கடையம் அருகேயுள்ள கட்டளையூரில் உணவகத்தில் பிரியாணி சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேருக்கு வாந்தி, பேதி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

கட்டளையூரைச் சேர்ந்த மாடசாமி (77), அவரது மகன் அழகுராஜன், பேரன் ஸ்ரீராம், பேத்தி ரித்திகா, மற்றொரு மகன் கண்ணன், மருமகள் அன்னலட்சுமி, அவர்களது மகள்கள் ஹார்சிகா, ஹர்சினி, மகன் ஹரிஹர சுதன் ஆகியோர் பாவூர்சத்திரத்திலுள்ள ஓர் உணவகத்தில் சனிக்கிழமை பிரியாணி வாங்கி சாப்பிட்டனராம்.

சிறிது நேரத்தில் அவர்களுக்கு வாந்தி, பேதி ஏற்பட்டதாம். இதையடுத்து அவர்கள் கடையத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதுகுறித்து கடையம் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

ஸ்ரீபெரும்புதூர் அருகே சிறுவன் கொலை: அஸ்ஸாம் இளைஞர் கைது

ஸ்ரீபெரும்புதூர், ஜூன் 22: ஸ்ரீபெரும்புதூர் அருகே 5 வயது சிறுவன் கொலை செய்யப்பட்டது தொடர்பாக அஸ்ஸாம் மாநில இளைஞர் கைது செய்யப்பட்டார்.

பிகார் மாநிலத்தைச் சேர்ந்தவர் நீரஜ்குமார். இவர் ஸ்ரீபெரும்புதூர் அடுத்த வடமங்கலம் ஊராட்சிக் குட்பட்ட கருமாங்கழனி பகுதியில் மனைவி காஜல்குமாரி, மகன் ஆரவ்குமார் (5) ஆகியோருடன் தங்கி பணியாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், ஆரவ்குமார் கடந்த 9–ஆம் தேதி காணாமல் போனதாக ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் காஜல்குமாரி புகார் அளித்தார். புகாரின் பேரில் ஸ்ரீபெரும்புதூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து காணாமல் போன சிறுவன் ஆரவ்குமாரை தேடி வந்தனர்.

இந்த நிலையில், அதே கிராமத்தில் அடர்ந்த முள்புதரில் அழுகிய நிலையில் சிறுவன் ஆரவ்குமார் சடலம் கிடப்பதாக ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்துக்கு தகவல் வந்தது. இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற போலீஸார், சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

கருமாங்கழனி பகுதியில் வடமாநிலத் தொழிலாளர்கள் தங்கியிருந்த குடியிருப்பில் கண்காணிப்பு கேமரா பதிவுகளை போலீஸார் ஆய்வு செய்ததில், ஆரவ்குமாரை இளைஞர் ஒருவர் அழைத்துச் சென்றது தெரிய வந்தது. இதையடுத்து அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த போல்தேவ் மசுவா (22) என்ற இளைஞரை பிடித்து போலீஸார் விசாரித்தனர்.

இதில், சிறுவன் ஓரினச் சேர்க்கைக்கு மறுத்ததால் அடர்ந்த முட்புதருக்கு அழைத்துச் சென்று கல்லால் அடித்துக் கொலை செய்ததாக போல்தேவ் போலீஸாரிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து போல்தேவ் மசுவா மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர்.

வீட்டில் தனியாக இருந்த மூதாட்டி கொலை: இளைஞர் கைது; 36 பவுன் மீட்பு

நாமக்கல், ஜூன் 22: நாமக்கல் மாவட்டம், வெப்படையில் நகைக்காக மூதாட்டியைக் கொலை செய்த இளைஞரை போலீஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

நாமக்கல் மாவட்டம், வெப்படை அருகே பாதரை சௌதாபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் கண்ணம்மாள் (80). இவர் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.45 மணியளவில் வீட்டில் மர்மமான முறையில் இறந்துகிடந்தார். இது குறித்து வெப்படை போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கு விரைந்து வந்த போலீஸார், சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக பள்ளிபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

இதுதொடர்பாக விசாரித்த போலீஸார், கண்ணம்மாளுக்குச் சொந்தமான மற்றொரு வீட்டில் கடந்த 6 மாதங்களாக ராசிபுரம், அத்தனூரைச் சேர்ந்த தறித்தொழிலாளியான சங்கர் (29) வாடகைக்கு குடியிருந்து வந்ததும், 36 பவுன் மதிப்பிலான நகைகளை திருடுவதற்காக கண்ணம்மாளின் வாயில் துணியை திணித்து கொலை செய்துவிட்டு எதுவும் தெரியாதது போல வீட்டிற்குள்ளேயே இருந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து சங்கரை கைது செய்த போலீஸார், அவரிடமிருந்த 36 பவுன் நகைகளை மீட்டனர்.

விமானம் தாமதம்: பயணிகள் வாக்குவாதம்

சென்னை, ஜூன் 22: சென்னையில் இருந்து மதுரை செல்லும் விமானத்தில் இயந்திர கோளாறு காரணமாக ஏற்பட்ட தாமதத்தால் விமான நிலைய மற்றும் ஏர்லைன்ஸ் நிறுவன அதிகாரிகளிடம் பயணிகள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சென்னை விமான நிலையத்தில் உள்நாட்டு முனையத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு மதுரை செல்லும் இன்டிகோ ஏர்லைன்ஸ் விமானத்தில் திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. இந்த விமானத்தில் பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், பாஜக மேலிட பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி உள்பட 100–க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். இயந்திரக் கோளாறால் விமானம் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டதால் குறிப்பிட்ட நேரத்துக்கு மதுரைக்கு செல்ல முடியாமல் பயணிகள் பெரிதும் அவதிக்குள்ளாகினர்.

இதைத் தொடர்ந்து விமானத்தின் இயந்திர கோளாறு சரி செய்யப்பட்டு, காலை 10.45 மணியளவில் மீண்டும் விமானம் மதுரைக்கு இயக்கப்பட்டது. இதில், தமிழிசை சௌந்தரராஜன், சுதாகர் ரெட்டி உள்ளிட்ட பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட ஏர்லைன்ஸ் நிறுவன அதிகாரிகள், பயணிகளுக்கு முறையாக தகவல் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் பயணிகள் விமான நிலைய மற்றும் ஏர்லைன்ஸ் நிறுவன அதிகாரிகளிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு அரசு
கொமாரபாளையம் நகராட்சி
15வது மத்திய நிதிக்குழு மானியம் - Tied Grant -2025-26
ந.க. எண். நி1/136/2025
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
நாள் : 20.06.2025
15வது மத்திய நிதிக்குழு மானியம் Tied Grant -2025-26ன்கீழ் கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்காணும் இரண்டு சிப்பம் மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளத்தின் வாயிலாக (https://tntenders.gov.in) மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வ. எண்.	பணியின் விபரம்	மதிப்பீட்டு தொகை	ஒப்பந்தப்புள்ளி பதிவம் கிடைக்கும் விபரம்	ஒப்பந்தப்புள்ளி திறப்பு விபரம்
1	மழைநீர் வடிகால் பணிகள் (சிப்பம்-1 மற்றும் சிப்பம்-2)	மொத்தம் ரூ.85.00 இலட்சம்	23.06.2025 (காலை 10.00 மணி முதல்)	9.07.2025 (மாலை 3.30 மணிக்கு)

முக்கிய தேதிகள்:-
1. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை https://tntenders.gov.in இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in இணைய தள முகவரியில் 23.06.2025 முதல் 09.07.2025 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
3. ஒப்பந்ததாரர்கள் முன் வைப்புத்தொகை 02.07.2025 அன்று காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
4. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்து சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: 09.07.2025 அன்று மாலை 3.00 மணி வரையில்.
5. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 09.07.2025 அன்று மாலை 3.30 மணி.
6. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியலாம்.
ஆணையாளர் (மு.கூ.பொ),
கொமாரபாளையம் நகராட்சி
ச.ம.தொ.இ / 3190 / ஒப்பந்தப்புள்ளி / 2025

ARKA ஆர்கா ஃபின்கேப் லிமிட்டெட்
பதிவு அலுவலக முகவரி: 2504, 25ஆவது தளம், ஒன் லோதா பிளேஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை - 400013, மகாராஷ்டிரா, இந்தியா
சுவாதீன (POSSESSION) அறிவிப்பு (கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 விதி 8(2)-க்கு இணங்க)
இப்பமும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை சொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க சட்டத்தின்கீழ் கீழே கையொப்பமிட்டுள்ளபடி, ஆர்கா ஃபின்கேப் லிமிட்டெட் நிறுவனத்தின் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் விதி 8-ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பின்வரும் கடன்தாரர்கள்/ கூட்டுக் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு (DEMAND NOTICE) அனுப்பி, முன்னொன்ன அறிவிப்பு விடைத்த நாளில் இருந்து 60 நாள்களுக்குள், அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார்.
கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் அந்த தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பரவலாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் பிரிவு 13 (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-இன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழே கையொப்பம் இட்டுள்ளவர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாள்களில் தனது தேடி சுவாதீனத்தில் (PHYSICAL POSSESSION) எடுத்திருக்கிறார்.
குறிப்பாக கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் மற்றும் பரவலாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், மேற்படி சொத்து(கள்) விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது ஆர்கா ஃபின்கேப் லிமிட்டெட் நிறுவனத்துக்கு க்கான கடன்பொறப்புக்கு கட்டுப்பட்டதாகும்.
கடனீட்டு சொத்துகளை மீட்பதற்கான கால அவகாசம் குறித்து, சர்ஃபாசி சட்டம் பிரிவு 13(8)-ன் வரம்புகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	சுவாதீன அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை
1. M/s துர்க்கை அம்மன் பிளேட்டிங் வொர்க்ஸ் (கடன்தாரர்)	07-01-2025	19-06-2025	ரூ. 1,67,60,032.54/- (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து ஏழு லட்சத்து அறுபதாயிரத்து முப்பத்து இரண்டு மற்றும் ஐம்பத்து நான்கு பைசா மட்டும்)
2. திரு.ராமச்சந்திரன் கோவிந்தராஜன் (கூட்டுக் கடன்தாரர்)			
3. திருமதி விமலாகுமாரி ராமச்சந்திரன் (கூட்டுக் கடன்தாரர்)			
4. M/s FENIEX பிராசஸ் (கூட்டுக் கடன்தாரர்)			

சொத்து விபரங்கள் : இன்றியமையாப் பகுதிகள் மற்றும் பாகங்கள் அனைத்துடனும் கூடிய சொத்து: அமைந்துள்ள கதவு எண் 33, மனை எண்கள் 4,5 மற்றும் 6 பரப்பளவு 5631 சதுர அடி அதாவது 523.13 சதுர மீட்டர் நிலத்துடன் அங்குக் கட்டப்பட்டுள்ள கட்டடம். அமைவிடம்: "MGR நகர்", SF எண் 251, கவுண்டம்பாளையம் கிராமம், வடவள்ளி சார் பதிவு அலுவலகம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம். எல்லைகள் மற்றும் அளவீடுகள் பின்வருமாறு: வடக்கு: 20 அடி அகல கிழமேல் லே அவுட் சாலைக்கு, தெற்கு: SF எண் 251-பாகம் நிலத்துக்கு, கிழக்கு: 20 அடி அகல தென்வடல் லே அவுட் சாலைக்கு, மேற்கு: கரேஷ் குமாருக்கு சொந்தமான சொத்துக்கு.
இடம்: கோயம்புத்தூர்
நாள்: 23-06-2025
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
ஆர்கா ஃபின்கேப் லிமிட்டெட்
Kirloskar Group Company

ADITYA BIRLA CAPITAL PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்யா பிர்லா கேபிடல் லிமிடெட்
பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பவுண்ட், வேரவல், குஜராத்-362266
கிளை அலுவலகம்: 2வது தளம், கட்டிட எண்.739, மேல் மாடி, நிலன் ஷோரூம், அவிநாசி சாலை, கோயம்புத்தூர்-641 018
பிற்சேர்க்கை-IV
[விதி 8(6)-ன் நிபந்தனைகளைப் பார்க்க]
அசையாச் சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் மற்றும் ஆதித்யா பிர்லா கேபிடல் லிமிடெட் இடையேயான இணைப்பு காரணமாக, தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாய அகமதாபாத்தில் 24.03.2025 அன்று பிறப்பித்த உத்தரவில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ள 11.03.2024 தேதியிட்ட ஒருங்கிணைப்பு திட்டத்தின்படி, கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்து தொடர்பாக ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் தொடர்பில் அனைத்து SARFAESI நடவடிக்கைகளும், அதன் விற்பனை செயல்முறை உட்பட, நிறுவனங்கள் சட்டம், 2013 -ன் பிரிவு 230 & 232 இன் படி இணைக்கப்பட்ட நிறுவனமான ஆதித்யா பிர்லா கேபிடல் லிமிடெட் நிறுவனத்திற்கு மாற்றப்படுகின்றன. அதன்படி, இந்த ஏல அறிவிப்பை ஆதித்யா பிர்லா கேபிடல் லிமிடெட் (இனிமேல் 'ABCL' என்று குறிப்பிடப்படுகிறது) வெளியிடுகிறது.
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை சொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6)&9(1) வரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு
இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள நிறுவனத்திடம் (Secured Creditor) அடமானம் / ஈடு வைக்கப்பட்டுள்ள, இங்கே விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துகள், ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்டின் (தற்போது 'ABCL' உடன் ஒருங்கிணைக்கப்பட்டது) அதிகாரபூர்வ அடையாள வசூலீனத்தில் (Possession) 24.02.2025 அன்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தச் சொத்துகள், கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் அதாவது M/s. ஸ்ரீனிவாசா கார்பெண்ட் பிஸிவேட் லிமிடெட் (SGPL), திரு. B ஸ்ரீராமுலு மற்றும் திருமதி. R ஜீவன் ஜோதி ஆகியோரிடமிருந்து ஈடு பெற்று கடன் வழங்கிய மேற்படி நிறுவனத்திற்குச் சேர வேண்டிய 28.02.2025 அன்றுள்ளபடி மற்றும் கடன் பாக்கி ரூ.17,00,00,208.60/- (ரூபாய் பதினேழு கோடியே இருநூற்று எட்டு மற்றும் அறுபது பைசா மட்டும்) மற்றும் அத்தொகை செலுத்தப்படும் வரை சேரும் வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து வசூலிப்பதற்காக 'உள்ளது உள்ளவாறு', 'உள்ள இடத்தில் உள்ளவாறு', 'உள்ளதெல்லாம் உள்ளவாறு' எனும் அடிப்படையில் 11 ஜூலை 2025 அன்று விற்கப்படவுள்ளன.
குறைந்த